**செய்தி வெளியீடு எண்: 109** **நாள் : 18.02.2016**

## " முதன்மைச் சங்கங்களின் சொத்துக்கள் ஜப்தி செய்யப்படவில்லை "

தமிழகத்தில் நகர்ப்புறத்தில் 628 முதன்மைக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களும் மற்றும் கிராமப்புறத்தில் 197 கிராமிய கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களும் ஆக மொத்தம் 825 முதன்மைக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களுக்கு தலைமைச் சங்கமாக தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் 15.7.1959–ல் துவங்கப்பட்டு முதன்மைச் சங்கங்களுக்கு தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் துவங்கப்பட்ட நாளிலிருந்து இதுவரை 11,65,032 கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு ரூ.4,785 கோடி அளவிற்கு வீட்டுவசதி தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள முதன்மைச் சங்கங்கள் மூலம் கடன் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி கடன்களில் 31.12.2015 தேதியில் 1,500 கோடி ரூபாய்க்கு தவணை தவறிய தொகைகள் முதன்மைக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்திற்கு செலுத்தப்பட வேண்டும். மேற்படி தொகையினை வசூல் செய்வதற்காக பல கால கட்டங்களில் அரசு பல்வேறு சலுகைகளை அறிவித்திருந்தும், கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் எவ்வித அக்கரையும் எடுத்துக் கொள்ளாமல், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் பல்வேறு நிதி நிறுவனங்களிடமிருந்து நிதியுதவி பெற்று வழங்கப்பட்ட கடன்களில் முதன்மைச் சங்கங்களில் வசூலிக்கப்படும் கடன் தொகைகளை முழுமையாக இணையத்திற்கு செலுத்தப்படாமலேயே அவ்வப்போது மடைமாற்றம் செய்யப்பட்டு சுமார் 11,000 உறுப்பினர்களுக்கு கடன்கள் முடிக்கப்பட்டிருந்தும் கடனுக்கு ஈடாக சங்கங்களில் பெறப்பட்ட அசல் பத்திரங்கள் வழங்கப்படாமல் நிலுவை வைக்கப்பட்டிருந்தன.

எனவே, தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம், சங்க உறுப்பினர்களின் நலன் கருதியும், சங்கத்தில் ஏற்படும் இன்னல்களை தவிர்க்கும் நோக்கத்துடனும் மற்றும் உறுப்பினர்கள் பத்திரங்கள் வேண்டி ஆங்காங்கே சட்டப்பூர்வ நடவடிக்கைகளை எடுத்துவருவது தவிர்க்கும் வகையில் நிலுவையிலிருந்த பத்திரங்களுக்குண்டான கடன் தொகைகளை சங்க கணக்குகளில் பற்று வைத்துக் கொண்டு உறுப்பினர்களின் அசல் பத்திரங்கள் ஒரு முறை சிறப்பினமாக விடுவிக்கப்பட்டது.

மேலும், 80 சதவீத கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் தவணைத் தொகைகளை திருப்பிச் செலுத்தப்படாமல் நிலுவை வைத்துள்ளது என பணியாளர்களின் சங்க நிர்வாகிகள் தெரிவித்து செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

மேற்படி 80 சதவீத சங்கங்களில் உறுப்பினர்களிடம் வசூலிக்கப்படும் தொகையினை எந்தவித அனுமதியின்றி தன்னிச்சையாகவே நிதியினை மடைமாற்றம் செய்யப்பட்டு கூட்டுறவு சங்கங்களின் நிர்வாகம் முறையாக செயல்படாத காரணத்தினால், முதன்மைச் சங்கங்கள் மீது 1983–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டப்பிரிவு 90–ன் கீழ் நிதியுதவி செய்யும் தலைமை சங்கத்தின் அதிகாரத்திற்குட்பட்டு தவணை தவறிய தொகைகளை வசூல் செய்வதற்கு சட்டப்பூர்வ நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. மேலும், முதன்மைச் சங்கங்களின் சொத்துக்கள் ஜப்தி நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளப்படவில்லை.

முதன்மைச் சங்கங்களில் ஒரு உறுப்பினர் கடன் தொகை செலுத்தப்படாமல் இருந்தால், அவ் உறுப்பினர் மீது தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றதோ அவ்வாரே தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் தவணை தவறிய தொகைகள் மீது சட்டப்பூர்வ நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் 1983–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டப்பிரிவு 90–ன் கீழ் தவணை தவறியுள்ள 553 முதன்மைச் சங்கங்கள் மீது தாவா நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்நடவடிக்கையினை எதிர்த்து பல்வேறு முதன்மைச் சங்கங்கள் மாவட்ட கூட்டுறவு தீர்ப்பாயத்தில் வழக்கு தொடுக்கப்பட்டும், சில மாவட்டங்களில் குறித்த காலம் வரை நடவடிக்கை தொடர தடையாணை பெற்றுள்ளது. மேலும் இவ்வழக்கு தொடர்பாக தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டத்திற்குட்பட்டு மேல் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

தவணை தவறிய தொகைகளை செலுத்துவதற்கு எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளப்படாமல், இணையம் எடுத்துள்ள நடவடிக்கைகளுக்கு மட்டும் விரைந்து வழக்கு தொடருவதும், தடையாணை பெறுவதும், போராட்டங்கள் நடத்துவதுமாக தொழிற்சங்கங்கள் முனைப்பாக உள்ளது..

இந்நிலையிலும், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் தவணை தவறிய தொகைகளை செலுத்த முன்வரும் உறுப்பினர்/சங்கங்களுக்கு தீர்பாணைக்கு முன் உள்ள பழைய நிலையில் கணக்கிட்டு தவணைத் தவறிய தொகைக்கான வட்டியும், அபராத வட்டியும் முழுமையாக தள்ளுபடி வழங்கப்படும் என்றும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

தவணை தவறிய தொகைகளை வசூலிக்க தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டத்திற்குட்பட்டுதான் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் நடவடிக்கை எடுத்துள்ளதே தவிர ஜப்தி நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**